முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2019 சனவரி

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2019-01-27
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

“2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி, ‘‘ஆள்’’ என்ற சொல் ஒரு கம்பனியை அல்லது ஆட்கள் குழுவொன்றை அல்லது ஏதேனும் அரசாங்கத்தை உள்ளடக்கும்”

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **“**ஆட்கள் குழுவொன்று’’ என்ற பதத்தின்கீழ் உள்ளடக்கப்படக்கூடிய மூன்று (03) ஆட்களை **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(b) இலங்கையிலுள்ள இரண்டு (02) பிரதான வரி அதிகாரசபைகளைக் (authorities) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

**வரையறுக்கப்பட்ட சாகரி (தனி) கம்பனி** 2017 யூலை 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் வியாபார நடவடிக்கைகளையும் அதே தினத்தில் ஆரம்பித்தது. 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதித் கூற்றுக்களின்படி கம்பனி கணக்கீட்டு நட்டத்தினை அடைந்திருந்ததுடன் அதற்கு வரிவிதி வருமானம் எதுவும் இருக்கவுமில்லை.

கம்பனிப் பணிப்பாளர்கள் பின்வருவன தொடர்பாக உங்கள் ஆலோசனையை நாடுகின்றார்கள்:

- உள்நாட்டிறைவரித் திணைக்களத்துடன் கம்பனியைப் பதிவுசெய்தல்
- 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரித் திரட்டினைச் சமர்ப்பித்தல்

**நீங்கள் செய்யவேண்டியது :**

உள்நாட்டிறைவரிச் சட்டத்தின்கீழ், மேலே தரப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கத்தக்க ஏற்பாடுகளைக் **குறிப்பிடுக.**
(05 புள்ளிகள்)

## வினா 03

(A) **சரத்** வதிவுள்ள தனியாள் ஒருவர் ஆவார். 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கான அவரது வருமானம் ஊழிய வருமானத்தையும் நிலையான வைப்பு மீதான வட்டி வருமானத்தையும் உள்ளடக்குகின்றது. மேலும், அவரது ஊழிய வருமானத்தில் உ.பொ.செ. (PAYE) வரி தொழில் கொள்பவரால் கழிக்கப்பட்டதுடன் நிலையான வைப்புக் கணக்கிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானத்தின்மீது நிறுத்திவைத்தல் வரி (WHT) கழிக்கப்பட்டிருந்தது. அவர் 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வேறு வருமானம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**சரத்** வருமானவரித் திரட்டொன்றை உள்நாட்டிறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) "ஏதேனும் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஐந்து (05) தேவைப்பாடுகளில் எவையேனும் நான்கு (04) தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் எவரேனும் தனியாள் ஒருவர் அத்தகைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஒரு மாதத்திற்குப் பிந்தாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வருமான வரித் திரட்டொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்."

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேலே குறிப்பிடப்பட்டவாறு வருமான வரித் திரட்டொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தகைமையுடையர் ஆவதற்கு பூர்த்திசெய்யப்பட வேண்டிய குறித்துரைக்கப்பட்ட ஏதாவது இரண்டு (02) தேவைப்பாடு களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஹெல்த் கெயர் (தனி) கம்பனி** மருந்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதுடன், மூன்று சகோதரர்களால் முகாமை செய்யப்பட்டு வருகின்றது. நாளாந்த வியாபார நடவடிக்கைகளில் தீவிர பங்கெடுக்கும் கம்பனியின் முகாமைப் பணிப்பாளரான திரு. **டயஸ்** வெளிநாட்டு மருத்துவச் சிகிச்சையொன்றிற்கு உட்பட வேண்டியேற்பட்டது. அதன் காரணமாக மற்றைய இரண்டு சகோதரர்களும் கம்பனியின் வெற்றிக்கான அவரது விதிவிலக்கான சேவையைக் கருத்திற்கொண்டு கம்பனியிலிருந்து திரு.**டயசுக்கு** விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றைச் செய்தார்கள்.

உள்நாட்டிறைவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர், கம்பனியிலிருந்து பெறப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவை திரு. **டயஸின்** ஊழிய வருமானத்தின் ஒரு பகுதியாக மதிப்பீடு செய்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கிரைப் எதிர் வருமான வரி ஆணையாளர் என்ற வழக்கின் தீர்ப்பைத் தொடர்புபடுத்தி மருத்துவச் சிகிச்சைக்காக கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வரி நோக்கங்களுக்காக **டயஸின்** ஊழிய வருமானமாகக் கருதப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

ஓய்வுபெற்ற ஆசிரியை **பத்துமி** 2014 சனவரி மாதத்தில் தாவர நாற்று வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்தார். 2016 இல் பத்துமியின் நண்பியான **சித்துமி** வியாபாரத்தில் ஒரு பங்காளராக இணைந்து **"சித்து பத்து குரோவேர்ஸ்"** என்ற பங்குடமையை ஆரம்பித்தனர். **பத்துமியும் சித்துமியும்** இலாப, நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்வதற்கு உடன்பட்டனர்.

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | **ரூ.** |
|---|---|
| மொத்த இலாபம் | 12,426,000 |
| கூட்டு: ஏனைய வருமானம் | |
| சேமிப்புக் கணக்கு மீதான வட்டி வருமானம் – மொத்தம் (நிறுத்திவைத்தல் வரி (WHT) கழிக்கப்படவில்லை) | 7,500 |
| | **12,433,500** |
| செலவுகள்: | |
| சம்பளங்கள் | (3,800,000) |
| சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | (432,000) |
| மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி | (144,500) |
| **சித்துமி** வழங்கிய கடன்மீதான வட்டி | (45,000) |
| எழுதுபொருட்கள் | (14,000) |
| **நிகர இலாபம்** | **7,998,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) சம்பளங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **பத்துமிக்கு** ஆண்டுச் சம்பளமாக ரூ.720,000/- செலுத்தப்பட்டது.
- பங்குடமையின் கணக்கு எழுதுவதற்காக **சித்துமியின்** மகளுக்கு ரூ. 500,000/- செலுத்தப்பட்டது.

(2) **சித்து**மியால் **சித்து பத்து குரோவேர்ஸ்** இற்கு வழங்கப்பட்ட கடனுக்கான வட்டி **சித்துமிக்குச்** செலுத்தப்பட்டது.

(3) 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வரிநோக்கத்திற்காக சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு விடுதொகை ரூ. 168,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) பங்குடமையின் வருமானவரிப் பரிப்பினைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பங்குடமையிலிருந்து பங்காளர்கள் பெற்றுக்கொள்ளும் இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களின் பகிர்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட அவோரல் டெக்னோலொஜிஸ்** பெறுமதிசேர் வரி (பெ.சே.வ.) நோக்கங்களுக்காக பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றாவதுடன், அது கணினிகளை இறக்குமதிசெய்து விற்றல், மென்பொருள் அபிவிருத்தி மற்றும் வேறு தொடர்புடைய சேவை வழங்குதல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) வருமானம் (பெ.சே.வ. தவிர்ந்தது)

| | ரூ. |
|---|---|
| கணினி விற்பனை | 5,200,000 |
| வலையமைப்புக் கேபிளிடலும் பொருத்துதலும் | 3,900,000 |
| SVAT பதிவுசெய்தோருக்கு வழங்கப்பட்ட பராமரிப்பு சேவைகள் | 1,350,000 |
| இந்தியாவில் பாவிப்பதற்காக வெளிநாட்டுக் கொள்வனவாளரொருவருக்கு விருத்தி செய்யப்பட்ட மென்பொருளொன்றிலிருந்து ஈட்டப்பட்ட வெளிநாட்டு நாணய வருமானம் (USD 1 = ரூ. 150/-) | 4,000,000 |
| **மொத்தம்** | **14,450,000** |

(2) கம்பனியால் செலுத்தப்பட்ட உள்ளீட்டு பெ.சே. வரி:

| | ரூ. |
|---|---|
| வலையமைப்புக் கேபிள் இறக்குமதி மீது | 320,000 |
| யாழ்ப்பாணத்திற்கு விற்கப்பட்ட கணினிகளின் போக்குவரத்து மீது செலுத்தப்பட்ட உள்ளீட்டு பெ.சே. வரி | 17,000 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மேலதிக உள்ளீட்டு பெ.சே. வரி ரூ.52,000/- ஆகும்.

(4) SVAT விற்பனைமீதான இலகுபடுத்தப்பட்ட பெ.சே. வரி வரவு வவுச்சர்கள் (SVCV) கம்பனியால் பெறப்பட்டிருந்தன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியினை **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 07

பீங்கான் பொருட்களை (ceramic) உற்பத்திசெய்து விற்பனை செய்வதைப் பிரதான வியாபாரமாகக் கொண்டுள்ள **சுனிமல் என்ரபிரைசஸ்** தீந்தை (பெயின்ற்) மற்றும் ஏனைய கட்டடப் பொருட்களை இறக்குமதி செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைசெய்யும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளது. **சுனிமல் என்ரபிரைசஸின்** 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் அதன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) கம்பனியின் விற்பனைகள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| கம்பனியால் உற்பத்திசெய்யப்பட்ட பீங்கான் பொருட்களின் விற்பனை | 4,360,000 |
| கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட தீந்தை மற்றும் ஏனைய கட்டடப் பொருட்களின் விற்பனை | 5,200,000 |
| **மொத்தம்** | **9,560,000** |

(2) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குரிய நிலையான வைப்பிலிருந்தான வட்டி வருமானம் ரூ. 250,000/- ஆகும்.

(3) கம்பனியால் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகை (NBT) பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| பீங்கான் பொருட்களின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தின்மீது | 140,000 |
| பீங்கான் பொருட்களின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள்மீது | 62,000 |
| இறக்குமதி செய்யப்பட்ட தீந்தை மற்றும் கட்டடப் பொருட்கள்மீது | 22,000 |

(4) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்பட்ட (NBT) தொகை ரூ. 25,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மீதித் தொகையினை **மதிப்பிடுக**. (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட மாளிகா கொன்ஸ்ரக்சன்ஸ் (தனி) கம்பனி (MCL)** நிருமாணத் துறையில் ஈடுபட்டுள்ள வதிவுள்ள கம்பனி ஒன்றாகும். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் இக்கம்பனி இலங்கையில் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது. 2018 மார்ச் 31 இல் கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் மொத்த ஒதுக்கங்கள் முறையே ரூ.20,000,000/- மற்றும் ரூ.5,000,000/- ஆகும்.

**MCL** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் புரள்வு (turnover) மற்றும் வருமான வரிக்கு முந்திய நிகர இலாபம் முறையே ரூ. 876,400,000/- மற்றும் ரூ. 16,250,000/- ஆகும்.

(2) ஏனைய வருமானம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

| | **ரூ.** |
|---|---:|
| நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் (நிறுத்தி வைத்தல் வரி [WHT] வங்கியால் கழிக்கப்பட்டது) | 240,000 |
| நிரற்படுத்தப்பட்ட தனிச்சங்கள் மீதான வட்டி வருமானம் (2016 ஆகஸ்ட்டில் முதலீடு செய்யப்பட்டது) | 1,456,000 |
| காப்புறுதிக் கோரிக்கை | 300,000 |
| **மொத்தம்** | **1,996,000** |

(3) நிகர இலாபமானது பின்வரும் செலவுகள் உட்பட எல்லாச் செலவுகளையும் கழித்த பின்பு பெறப்பட்டதாகும்:

| | **ரூ.** |
|---|---:|
| பெறுமானத்தேய்வு | 5,028,000 |
| உபசரணை | 134,000 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகள் **(குறிப்பு 01 )** | 474,000 |
| தண்டங்கள் **(குறிப்பு 02 )** | 1,903,600 |
| நன்கொடைகள் **(குறிப்பு 03 )** | 1,250,000 |
| சட்ட மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள் **(குறிப்பு 04 )** | 115,000 |
| ஊடகங்கள் மூலமான விளம்பரம் | 765,000 |
| பணிக்கொடை **(குறிப்பு 05 )** | 8,500,000 |
| குத்தகை வட்டி | 60,750 |
| தாய்க்கம்பனிக்குச் செலுத்திய வட்டி **(குறிப்பு 06)** | 3,000,200 |

**குறிப்பு 01 – வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகள்:**

- புதிய இயந்திரமொன்றைப் பரீட்சிப்பதற்காக பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) வெளிநாடு செல்வதற்கான விமானச்சீட்டுக் கிரயம் ரூ. 120,000/- ஆகும்.
- எதிர்காலச் செயற்றிட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக பிரதம பொறியியலாளரை மாலைதீவுக்கு அனுப்பியதற்கான பயணச் செலவு ரூ. 354,000/- ஆகும்.
- 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வியாபாரத்திலிருந்தான நியதிச்சட்ட வருமானம் ரூ. 14,880,000/- ஆகும்.

**குறிப்பு 02 – தண்டங்கள்:**

| | ரூ. |
|---|---|
| வரி மதிப்பீடொன்றின் மீது செலுத்தப்பட்ட மேலதிக வரி | 1,276,000 |
| மேலதிக வரி மீதான தண்டம் | 127,600 |
| தாமதமான நிறைவேற்றம் தொடர்பாக முடிவுறுத்தப்பட்ட தண்டப்பணம் | 500,000 |

**குறிப்பு 03 – நன்கொடைகள்:**

| | ரூ. |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றான சிறுவர் இல்லத்திற்கான பண நன்கொடை | 1,000,000 |
| ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் | 250,000 |

**குறிப்பு 04 – சட்ட மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள்:**

| | ரூ. |
|---|---|
| வரிமதிப்பீடு தீர்வுகாண்பதற்கான கட்டணம் | 65,000 |
| வரித் திரட்டைச் சமர்ப்பிப்பதற்கான கட்டணம் | 50,000 |

**குறிப்பு 05 – பணிக்கொடை:**

பணிக்கொடையானது 2018 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடுகளைக் குறிப்பதுடன், நடப்பாண்டுக் காலப்பகுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

**குறிப்பு 06 – தாய்க் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட வட்டி:**

கம்பனி, தாய்க் கம்பனியான **ஈசி லைவ் பொதுக் கம்பனியிலிருந்து** ரூ.112,000,000/- கடன் ஒன்றைப் பெற்றிருந்தது. கம்பனி ஆண்டின் காலப்பகுதியில் அதன் தாய்க் கம்பனியிலிருந்து பெற்ற கடனுக்காக செலுத்திய வட்டி ரூ. 3,000,200/- ஆகும்.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரம் பின்வருமாறு:

**கிரயம்**

| சொத்துக்கள் | 2017.04.01 இல் மீதி (ரூ.) | சேர்த்தல்கள் (ரூ.) | விற்பனைகள் (ரூ.) | 2018.03.31 இல் மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| காணி | 8,000,000 | - | - | 8,000,000 |
| கட்டடம் | 2,500,000 | - | - | 2,500,000 |
| இயந்திரம் | 25,670,000 | 3,450,000 | | 29,120,000 |
| மோட்டார் வாகனம் | 10,450,000 | - | 2,400,000 | 8,050,000 |
| அலுவலக உபகரணம் | 1,546,000 | 348,000 | - | 1,894,000 |
| கணினிகள் - குத்தகை | - | 800,000 | - | 800,000 |
| **மொத்தம்** | **48,166,000** | **4,598,000** | **2,400,000** | **50,364,000** |

**பெறுமானத்தேய்வு**

| சொத்துக்கள் | 2017.04.01 இல் மீதி (ரூ.) | ஆண்டிற்கான கட்டணம் (ரூ.) | விற்பனைகள் (ரூ.) | 2018.03.31 இல் மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| கட்டடம் | 1,000,000 | 125,000 | - | 1,125,000 |
| இயந்திரம் | 15,402,000 | 3,080,400 | - | 18,482,400 |
| மோட்டார் வாகனம் | 4,702,500 | 1,149,500 | 2,400,000 | 3,452,000 |
| அலுவலக உபகரணம் | 463,800 | 162,500 | - | 626,300 |
| கணினிகள் - குத்தகை | - | 192,000 | | 192,000 |
| **மொத்தம்** | **21,568,300** | **4,709,400** | **2,400,000** | **23,877,700** |

- செயற்றிட்டமொன்றில் பயன்படுத்தப்பட்டுவந்த பாரவூர்தி ஒன்று 2017 டிசெம்பரில் விபத்துக்கு உள்ளாகியதால் அது பூரணமாக விலக்கிவிடப்பட்டது. காப்புறுதிக் கம்பனி காப்புறுதிக் கோரிக்கையாக ரூ. 300,000/- செலுத்தியதுடன் அது ஏனைய வருமானங்களில் பதிவு செய்யப்பட்டது. இந்தப் பாரவூர்தி 2013/14 ஆம் வரிமதிப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

- 2017 யூன் 01 ஆந் திகதியிலிருந்து ஒவ்வொன்றும் ரூ. 160,000/- கிரயமுள்ள ஐந்து (05) மடிக் கணினிகள் நிதிக் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் 30 மாதக் குத்தகை தவணை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. குத்தகை மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூ.45,000/- ஆவதுடன் நடப்பு வருட காலப்பகுதியில் 10 தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

- வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலொழிய, 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்த சகல ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் வரிநோக்கங்களுக்காக பூரணமாகப் பெறுமானத்தேய்வு அளிக்கப்பட்டிருந்தன.

(5) 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணக் (ESC) கொடுப்பனவு ரூ. 4,382,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்காக பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரிமதிக்கத்தக்க வருமானம்

(c) வரிவிதி வருமானம்

(d) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்த வேண்டிய மீதி வரி

**மு.கு.:** ஏதேனும் செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

***திருமதி சில்வா*** 64 வயதுடையவர். பட்டயக் கணக்காளரான அவர் இலங்கையில் முன்னணியிலுள்ள பிரயாண முகவர் கம்பனியான **வரையறுக்கப்பட்ட ஈசி டுவர் (தனி) கம்பனியில்** நிதிப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு ஆண்டு எனக் குறிப்பிடப்படும்) ***திருமதி சில்வா*** தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டின் காலப்பகுதியில் அவர் கம்பனியிலிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக்கொண்டார்:

- மொத்தச் சம்பளம் – மாதாந்தம் ரூ. 240,000/-.
- அவரது தனிப்பட்ட மற்றும் அலுவலகப் பாவனைக்காக மோட்டார் கார் ஒன்று (இயந்திர வலு 2000 cc) எரிபொருள் மற்றும் சாரதியுடன் கம்பனியால் வழங்கப்பட்டிருந்ததுடன், தனது தனிப்பட்ட பாவனைக்காக தொழில்கொள்பவருக்கு அவர் கொடுப்பனவும் செய்யவில்லை. கம்பனி இக்காருக்கான ஓட்டப் பதிவுகள் எதனையும் பேணவில்லை.
- ஆண்டின் காலப்பகுதியில் டுபாயிலுள்ள பிரயாண முகவர்கள் கழகத்தின் மாநாட்டில் அவர் கலந்துகொண்டதுடன், அதற்கான விமானச்சீட்டு, தங்குமிடக் கட்டணத்திற்கான கிரயம் ரூ. 720,000/- கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டது.
- ஆண்டின் காலப்பகுதியில் ஆண்டிற்கான அவரது தொலைபேசிக் கட்டணத் தொகையான ரூ. 291,000/- இனைக் கம்பனி மீளச் செலுத்தியிருந்தது.

(2) ***வரையறுக்கப்பட்ட ஈசி டுவர் (தனி) கம்பனியின்*** துணைக் கம்பனியொன்றினால் அவருக்குப் பணிப்பாளர் கட்டணமாக மாதாந்தம் ரூ.84,000/- (வரி கழித்த நிகரத் தொகை) செலுத்தப்பட்டது. துணைக் கம்பனியின் ஊழியராக அவர் கருதப்படவில்லை எனவும் அவரது பணிப்பாளர் கட்டணத் தொகையில் உரிய வரி கழிக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(3) ***திருமதி சில்வா*** 2017 மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரொஸ்மீட் பிளேஸ் இலுள்ள தனது சொந்தத் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கின்றார். இவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ.1,500,000/- ஆவதுடன் சோலைவரி 30 % இல் செலுத்தப்பட்டது.

(4) அவருக்கு அவரது பெற்றோரிடமிருந்து முதிசமாகக் கிடைத்த வீடொன்று கண்டியில் இருப்பதுடன் 2018 சனவரியில் இருந்து அவரது சகோதரர் அவ்வீட்டில் வசித்து வருகின்றார். இவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ. 120,000/- ஆவதுடன் சோலைவரி 20 % இல் செலுத்தப்பட்டது. அவரது சகோதரர் இவ்வீட்டில் குடியேறுவதற்கு முன்பு 2017 டிசெம்பர் மாதம் வரை அயலவர் ஒருவருக்கு அவ்வீடு மாதம் ரூ. 100,000/- வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(5) ***திருமதி சில்வா*** மக்கள் வங்கியில் ரூ. 5,200,000/- இனை நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருந்ததுடன் ஆண்டின் காலப்பகுதியில் அதிலிருந்து ரூ.420,000/- வட்டியாகப் பெற்றுக் கொண்டார். இவ்வட்டி வருமானத்தின்மீது வங்கியினால் நிறுத்தி வைத்தல் வரி (WHT) கழிக்கப்பட வில்லை.

(6) ஆண்டின் காலப்பகுதியில், அவர் இலங்கை வங்கியிலிருந்து ரூ. 5,500,000/- இனை வீட்டுக் கடனாகப் பெற்றதுடன் அப்பணத்தினை ரொஸ்மீட் பிளேஸ் தொடர்மாடிக் குடியிருப்பைக் கொள்வனவு செய்வதற்காக முதலீடு செய்திருந்தார். அவர் இக்கடன்மீதான வட்டியாகவும் கடன் மீள்கொடுப்பனவாகவும் முறையே ரூ. 304,000/- மற்றும் ரூ. 280,000/- இனை ஆண்டிற்காகச் செலுத்தியிருந்தார்.

(7) ஆண்டின் காலப்பகுதியில், கைவிடப்பட்ட சிறுவர்களைப் பராமரிக்கும் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் இல்லம் ஒன்றிற்கு அவர் ரூ. 90,000/- நன்கொடையாக வழங்கியிருந்தார்.

(8) ***ஈசி டுவர் கம்பனியால்*** ஆண்டிற்கான உ.பொ.செ. (PAYE) கழிப்பனவு ரூ. 200,000/- ஆகும்.

(9) ஆண்டின் காலப்பகுதியில், சுயமதிப்பீட்டு அடிப்படையில் வருமானவரியாக ரூ.25,000/- செலுத்தியிருந்தார்.

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2017/18 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **திருமதி சில்வா**வுக்காக பின்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின் (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01 கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02 பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03 பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |